TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM
8075026

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : Dindigul
மாவட்டம்
PS: Vig AC
காவல்நிலையம்
Year: 2019
ஆண்டு
FIR No: 01/19
மு.த.அ. எண்
Date: 23.02.19
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption
Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act 1988 as Prevention of
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Corruption (Amendment)
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Act 2018

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 20.02.19
நாள் முதல்
Date to : 21.02.19, 22.02.19
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from :
நேரம் முதல்
Time to :
நேரம் வரை

(b) Information Received at PS. Date : 23.02.19
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 07.00
நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 23.02.19
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 08.15
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: about 60 km west
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number :
முறைக் காவல் எண்
(b) Address : Tahsildar office palani and Revenue Inspector office palani
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District :
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. Sivakumar
குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Ragupathy
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth :
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality :
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation :
தொழில்
(g) Address : 14, West Street, A. Andikuppam. panruti, cuddalore
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்
1) Tr. Mani
Zonal Deputy Tahsildar
Taluk office, palani
2) Tr. Parthiban
Revenue Inspector,
R.I office, palani.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— R. Siv
23.2.19

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: காவல் ஆய்வாளரான நான் 23.02.2019ம் தேதி காலை 07.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது R.சிவக்குமார், வயது.40/2019, த/பெ. ரகுபதி, கதவு எண்.14, மேற்குத்தெரு, A. ஆண்டிக்குப்பம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம் என்பவர் கொடுத்த புகாரின்பேரில் கீழ்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர் R.சிவக்குமார், வயது.40/2019, த/பெ. ரகுபதி, கதவு எண்.14, மேற்குத்தெரு, A. ஆண்டிக்குப்பம், பண்ருட்டி, கடலூர் மாவட்டம் பெறுநர் உயர்திரு.காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திண்டுக்கல், அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகின்றேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு இரண்டு மகள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். கடலூர் மாவட்டம், பண்ருட்டி தாலுகா, A. ஆண்டிகுப்பம், கதவு எண் 107, வடக்கு தெருவில் வசித்து வரும் எனது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the cas and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refuse Investigation / transferred to PS ................................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ...................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Si (signature)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

(signature) 23/02/19

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலின் ஒப்பம்

Name: பெயர் J. Rupageetharam
Rank: நிலை ...................... No. எண் ..........
Inspector of police
VAC, Dindigul

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.02.19 at 10.15 hrs.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:1/2019 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

திரு.M.ஜெகன்மோகன் என்பவருடன் சேர்ந்து மர வியாபாரம் தொழில் செய்து வருகிறேன். தமிழ்நாடு முழுவதும் சென்று சம்மந்தப்பட்ட நில உரிமையாளர்கள், வருவாய்துறையினர் மற்றும் வனத்துறையிர் அனுமதிபெற்று மரங்களை வெட்டி எடுத்துச்சென்று நாங்கள் வியாபாரம் செய்து வருகின்றோம். அதன்படி திண்டுக்கல் மாவட்டம் பழனி தாலுகா நெய்காரபட்டி ராஜரத்னா மில் பங்களாவில் வசிக்கும் ஜகனாத் என்பவரது மகன் திருJ.துளசிதரன் என்பவருடன் அவருக்கு சொந்தமான பழனி தாலுகா அய்யம்புள்ளி கிராமம் பட்டா எண்.913, சர்வே எண்.792/2ல் 1.50.0 ஹெக்டேர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தேக்குமரங்களை வெட்டுவதற்கு மொத்தம் ரூ.42,50,000/-த்திற்கு (நாற்பத்தி இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம்) கடந்த 18.12.2018ம் தேதி ஒப்பந்த பத்திரம் செய்தோம். அந்த ஒப்பந்த பத்திரத்தின்படி மேற்கண்ட திருJ.துளசிதரன் என்பவரது பழனி கரூர் வைஸ்யா வங்கி கணக்கில் அட்வான்ஸ் தொகையாக ரூ.7,00,000/-(ரூபாய் ஏழுலட்சம்) செலுத்தினோம். அந்த ஒப்பந்தத்தின்படி சம்மந்தப்பட்ட அரசு அலுவலகங்களில் அனுமதி உத்திரவும் பெற்று உத்தரவின் அசல் மற்றும் நகலை திருJ.துளசிதரன் அவர்களிடம் கொடுத்து ஒப்பந்தத் தொகையில் அட்வான்ஸ் நீங்கலாக மீதித்தொகை ரூ.35,50,000/-(ரூபாய் முப்பத்தைந்து லட்சத்து ஐம்பதாயிரம்)ஐ செலுத்திய பிறகு மரங்களை வெட்டி எடுத்துச்செல்ல ஒப்புக்கொள்ளப்பட்டது. மரம் வெட்டுவதற்கு வனத்துறையினரின் அனுமதி கோரியபோது மரம் யாருடைய பட்டா நிலத்தில் உள்ளது என்று வருவாய்துறையினரிடம் மரஉரிமைச்சான்று பெற்றுவருமாறு கூறினார்கள். அதன்படி கடந்த 04.01.2019ம் தேதி பழனி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்தில் எனது பெயரில் ஒரு மனு தயார் செய்து அதனுடன் நான் எனது நண்பர் திரு.M.ஜெகன்மோகன் மற்றும் நில உரிமையாளர் திருJ.துளசிதரன் ஆகியோருக்கு இடையில் 18.12.2018ம் தேதி தயார் செய்யப்பட்ட ஒப்பந்த பத்திரன் நகல் மற்றும் நில உரிமையாளர் கொடுத்த பட்டா எண் 913ன் நகல் ஆகியவற்றை இணைத்து துளசிதரண் பெயரில் அடங்கல் வழங்குமாறு மனு செய்ய சென்றேன். அப்போது மதியம் சுமார் 2 மணி இருக்கும். இ-சேவை மையம் தினந்தோறும் மதியம் 01.30 வரை செயல்படும் என்று அலுவலத்தின் வெளியே அறிவிப்பு ஒட்டப்பட்டிருந்தது. அதனால் அன்று மனு செய்யாமல் எனது சொந்த ஊர் பண்ரூட்டி சென்றுவிட்டு

11.01.2019ம் பழனி வட்டாச்சியர் அலுவலகம் வந்து 04.01.2019ம் தேதி தயார் செய்த அதே மனுவை இ-சேவை மையத்தில் கொடுத்தேன். அதற்கு அன்றைய தினமே ஆன்லைன் மூலம் தாலுகா மனு எண்.2019/9005/13/874970/0111(New Petition) &Date:11/01/2019 என்று மனு ஒப்புதல் சீட்டு பெற்றேன். பின்பு ஒரு வாரம் கழித்து பழனி வட்டாச்சியர் அலுவலகத்தில் உள்ள கிளார்க்கை சந்தித்து எனது மனு பற்றிய விபரம் கேட்டேன். அதற்கு அவர் அந்த மனுவை தேடி எடுக்கவேண்டும் என்று கூறினார். அதன்பிறகு ஜாக்டோ ஜியோ சங்க அரசு ஊழியர்கள் வேலை நிறுத்ததில் இருந்ததால் சுமார் 1 மாதம் கழித்து 20.02.2019ம் தேதி மதியம் சுமார் 3 மணியவில் நான் பழனி வட்டாட்சியர் அலுவலகம் சென்று மண்டல துணை தாசில்தார் திரு.மணி அவர்களை சந்தித்து எனது மனு சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் அடங்கல் வழங்கி அதனுடன் சேர்த்து மரஉரிமை சான்று வழங்க ஏற்பாடு செய்வதற்கு சுமார் 2 லட்சம் செலவாகும் என்று கூறினார். அதற்கு நான் இந்த பணம் அரசாங்கதிற்கு செலுத்தவேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர் என்ன விபரம் தெரியாத ஆளாக இருக்கிறீர்கள். உங்கள் மனு மீது நடவடிக்கை எடுத்து அடங்கல் வழங்கி அதன்பின்பு மரஉரிமை சான்று நீங்கள் பெற பரிந்துரை செய்து ஏற்பாடு செய்வதற்கு எனக்காகும் செலவு என்று கூறினார். அதன் பின் நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். அன்று இரவு நான் பழனியில் தேவஸ்தானத்திற்கு சொந்தமான வேலன் குடிலில் அறை எண் 9 ல் தங்கினேன். பின்பு மறுநாள் 21.02.2019ம் தேதி மதியம் சுமார் 1 மணியளவில் நான் பழனி வட்டாட்சியர் அலுவலகம் சென்று மண்டல துணை தாசில்தார் திரு.மணி அவர்களை சந்தித்து எனது மனு பற்றி கேட்டேன். அப்போது அவர் என்னிடம் நான் கேட்ட பணம் ரூ 2 லட்சம் கொண்டு வந்தீர்களா என்று கேட்டார். அதற்கு நான் கஜா புயலினால் எனது வியாபாரம்மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என்றும், பணத்தை குறைத்துக் கொள்ளுமாறு வேண்டினேன். அப்போது அவர் ரூ.55,000/-ம் குறைத்து, ரூ.1,45,000/-த்தை வரும் 22.02.2019ம்தேதி மதியம் வாக்கில் எனது அலுவலகம் வந்து கொடுத்தால்தான் மரஉரிமை சான்று மற்றும் அடங்கல் கிடைக்க பரிந்துரை செய்வேன் இல்லை என்றால் நீங்கள் தேர்தல் சமயத்தில் அலைந்து வாங்க முடியாது என்று கறாராக கூறினார். அதற்கு நான் பணம் ரெடி பண்ணிவிட்டு வருகின்றேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். அன்றும் பழனியில் அதே அறையில் தங்கிவிட்டேன். பின்பு நான் தங்கி இருக்கும் விடுதிக்கு வந்து பணம்

புரட்ட முயன்றேன். மிகவும் சிரமமாக இருந்தது. அதனால் 22.02.19ம் தேதி மாலை சுமார் 04.15மணிக்கு மீண்டும் மண்டல துணை தாசில்தார் திரு.மணி அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். அப்போது அவர் நான் கேட்ட பணம் ரூ1,45,000/- கொண்டுவந்து விட்டீர்களா என்று கேட்டார். அதற்கு நான் பணம் புரட்ட சிரமமாக உள்ளது கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கெஞ்சிகேட்டேன். ஆனால் அவர் நீங்கள் லட்சக்கணக்கில் வியாபாரம் செய்கிறீர்கள் இது ஒன்றும் பெரிய தொகை இல்லை. நான் கேட்ட பணத்தை ரெடி பண்ணி பழனி வருவாய் ஆய்வாளர் திரு.பார்த்திபன் அவர்களை அவரது அலுவலகத்தில் பார்த்து கொடுங்கள் என்றும், அவரிடம் நான் சொல்லியுள்ளேன் என்றும் கூறினார். அதன்பின்பு வருவாய் ஆய்வாளர் திரு.பார்த்திபன் அவர்களை அவரது அலுவலகத்தில் அன்றைய தினம் சுமார் மாலை 5.30 மணிக்கு சந்தித்து எனது சான்று சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர் மண்டல துணை தாசில்தார் திரு.மணி ஏற்கனவே உங்கள் சான்று தயாரிப்பது சம்பந்தமாக சொல்லியுள்ளார். அதற்கு எங்களுக்கு ஆகும் செலவாக மண்டல துணை தாசில்தார் கூறிய தொகையான ரூ.1,45,000/- கொண்டுவந்துள்ளீர்களா என்று கேட்டார். மேலும் நான் கொடுத்த மனுவின் நகலை கொடுக்கும்படியும் கேட்டு வாங்கிக் கொண்டார். அப்போது நான் பணம் ரூ.1,45,000/- தற்போது என்னிடம் இல்லை. ரெடி பண்ணி வருகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் நாளை 23.02.2019ம் தேதி மதியம் வாக்கில் என்னை அலுவலகத்தில் வந்து சந்தித்து ரூ.1,45,000/- கொடுத்து உங்களுக்கான சான்று சம்மந்தமான வேலையை முடித்துக் கொள்ளுங்கள். இல்லை என்றால் வரும் வாரம் முழுவதும் எங்களுக்கு தனி அலுவல் வேலை இருப்பதாலும் பின்பு நீங்கள் தேர்தல் முடிந்து தான் சான்று பெற முடியும். அதனால் எங்களுக்காகும் செலவு தொகையான ரூ.1,45,000/- கொடுத்து உங்கள் வேலையை முடித்துக்கொள்ளுங்கள் என்று கறாராக கூறிவிட்டார். பின்பு யோசித்துப் பார்த்ததில் அடங்கல் மற்றும் மரஉரிமை சான்று பெறுவற்கு தனது பரிந்துரை செய்து மேலே அனுப்பி எனக்கு கிடைக்க எற்பாடு செய்ய திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டாட்சியர் அலுவலக மண்டல துணை தாசில்தார் திரு.மணி மற்றும் பழனி வருவாய் ஆய்வாளர் திரு.பார்த்திபன் ஆகியோருக்கு ரூ.1,45,000/- லஞ்சம் கொடுத்துப் பெற நான் விரும்பவில்லை. இது சம்மந்தமாக இன்று 23.02.2019-ம் தேதி காலை 07.00 மணிக்கு புகார் மனுவினை தயார் செய்து மண்டல துணை தாசில்தார் திரு.மணி மற்றும் வருவாய் ஆய்வாளர் திரு.பார்த்திபன் ஆகியோர் கேட்ட லஞ்சப்பணம்

ரூ.1,45,000/-ஐ சேர்த்து கொண்டுவந்துள்ளேன். இம்மனுவுடன் நான் எனது நண்பர் திரு.M.ஜெகன்மோகன் மற்றும் நில உரிமையாளர் திருJ.துளசிதரன் ஆகியோருக்கு இடையில் 18.12.2018ம் தேதி தயார் செய்யப்பட்ட ஒப்பந்த பத்திரத்தின் நகல், நில உரிமையாளர் கொடுத்த பட்டா எண் 913ன் நகல் மற்றும் பழனி இ-சேவை மையத்தில் பெறப்பட்ட ஆன்லைன் தாலுகா மனு எண்.2019/9005/13/874970/0111 (New Petition) &Date:11/01/2019 என்ற மனு ஒப்புதல் சீட்டு நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, R.சிவக்குமார், 23.02.19 Sir, Received the Complaint on 23.02.19 at 07.00hrs. After obtaining concurrence from the Superintendent of Police, Southern Range, DVAC., Chennai, the case in Dindigul Vigilance and Anti-Corruption Cr.No.1/2019 u/s. 7 of Prevention of Corruption Act 1988 as prevention of Corruption (Amended) Act 2018 was registered on 23.02.2019 at 08.15 hrs Sd/-xxxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul) பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு அதனுடன் இணைந்த ஆவணங்கள் ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் / சிறப்பு நீதிபதி, திண்டுக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

J Rupa 23/02/19

(J.Rupa Geetharani)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.